## வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள் - 1

வகுப்பு : 10 ஆம் வகுப்பு பாடம் : சமூக அறிவியல்

நேரம் : **15 mins + 3 hrs** மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

***குறிப்பு : கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையை சேர்த்து எழுதவும்.*** $14 \times 1 = 14$

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
   அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்
2. ரஷ்ய கம்யூனிச கட்சியின் அதிகார பூர்வ நாடு மாநாடு ________.
   அ) போல்ஷ்விக் ஆ) மென்ஸ்விக் இ) பிராவ்தா ஈ) கிரெம்ஜின்
3. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?
   அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936
4. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?
   அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பெர்லின் இ) உட்ரோ வில்சன் ஈ) பால்டுவின்
5. வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?
   அ) 1917 ஆ) 1976 இ) 1973 ஈ) 1974
6. இந்தியாவின் வடக்கு – தெற்கு பரவல்
   அ) 2500 கி.மீ ஆ) 2933 கி.மீ இ) 3214 கி.மீ ஈ) 2814 கி.மீ
7. இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை
   அ) ஹிராகுட் அணை ஆ) பக்ராநங்கல் அணை இ) மேட்டூர் அணை ஈ) நாகர்ஜுனா சாகர் அணை
8. கீழ்க்கண்டவற்றில் அரபிக் கடலில் கலக்கும் ஆறு எது?
   அ) பெரியார் ஆ) காவிரி இ) சிற்றார் ஈ) பவானி
9. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ________
   அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) பஞ்சாப் ஈ) மத்தியப் பிரதேசம்
10. கூற்று: கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மண்டலம் தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது.
    காரணம்: இவைகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன.
    அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
    ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.
    இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
    ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.
11. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?
    அ) பிரிவு 352 ஆ) பிரிவு 356 இ) பிரிவு 360 ஈ) பிரிவு 368
12. இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?
    அ) வங்காளதேசம் ஆ) மியான்மர் இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா
13. GST பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
    i) GST ஒரு முனைவரி
    ii) இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்படும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    iii) இது ஜீலை 1, 2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.
    iv) இது இந்தியாவில் வரி கட்டமைப்பை ஒன்றிணைக்கும்
    அ) i) மற்றும் ii) சரி ஆ) ii),(iii) மற்றும் iv) சரி இ) i), iii) மற்றும் iv) சரி ஈ) அனைத்தும் சரி
14. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது
    அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) மதுரை

### பகுதி – II

***எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். 28-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.*** $10 \times 2 = 20$

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. மாவோவின் நீண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
17. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
18. களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?
19. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
20. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன?
21. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

22. கோயம்புத்தூர் ஏன் தமிழ்நாட்டின் "மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது?
23. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளைப் பட்டியலிடுக.
24. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் என்ன?
25. போர்த்திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (SPA) பற்றிய சிறு குறிப்பு வரைக.
26. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?
27. உலகமயமாக்கல் என்றால் என்ன?
28. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.

## பகுதி – III

***எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.*** **$10 \times 5 = 50$**
***42-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.***

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) ஐரோப்பியக் குழுவின் தலைமையகம் _______ நகரில் அமைந்துள்ளது.
ii) பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி _______.
iii) அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக _______ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
iv) இந்தியா, உலகத்தில் _______ மிகப்பெரிய பொருளாதார நாடாகும்.
v) நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி _______ ஆகும்.

**30. பொருத்துக.**

| | |
|---|---|
| i) கமால் பாட்ஷா | - தங்கம் |
| ii) டிரான்ஸ்வால் | - பஞ்சாப் |
| iii) ராயல் கப்பற்படை | - துருக்கி |
| iv) சிங்மென் ரீ | - பிரிட்டன் |
| v) ஆரிய சமாஜம் | - கொரிய |

**31. பொருத்துக.**

| | |
|---|---|
| i) யமுனை | - இந்தியாவின் உயரமான அணை |
| ii) நர்மதை | - 1960 |
| iii) டெகிரி அணை | - கங்கை ஆற்றின் துணை ஆறு |
| iv) ஜிப்சம் | - அமர்கண்டாக் |
| v) எல்லைபுறச் சாலை | - சிமெண்ட |

**32. அ) வேறுபடுத்துக.**

i) மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி
ii) வண்டல் மண் மற்றும் கரிசல் மண்

**ஆ) காரணம் கூறுக:** வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.

33. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி.
34. வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
35. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
36. தமிழ்நாட்டில் உள்ள மண் வகைகளின், பரவல் மற்றும் அவற்றின் பண்புகளை விளக்குக.
37. அடிப்படை கடமைகளை பட்டியலிடுக.
38. அண்டைநாடுகளுடன் நட்புறவினைப் பேண இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கை இரண்டினை விவரி
39. இந்தியாவில் GDP யில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.
40. பசுமைப் புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரி.

**41. கீழ்க்காண்பனவற்றிக்கு காலக்கோடு வரைக.**
1920 முதல் 1940 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

**42. உலக வரைபடத்தில் இடங்களை குறிக்கவும்.**
i) கிரேட் பிரிட்டன் ii) துருக்கி iii) ருமேனியா iv) சான் பிரான்சிஸ்கோ v) ஆஸ்திரியா

## பகுதி – IV

***இரு வினாக்களுக்கும் விடையளிக்க.*** **$2 \times 8 = 16$**

43. சுயமரியாதை இயக்கம் பற்றி ஒரு கட்டுரை வரைக **(அல்லது)**

i) தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்
ii) பாரிஸ் அமைதி மாநாட்டின் முடிவுகள் எவ்வாறு இத்தாலியில் பாசிசம் தோன்றக் காரணமாக அமைந்தன.

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்**

i) கைலாஷ் மலைத்தொடர் ii) கங்கை ஆறு iii) பசுமை மாறாக்காடுகள் iv) நீலகிரி
v) வண்டல் மண் vi) சென்னை vii) பழவேற்காடு viii) தூத்துக்குடி

**(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**

i) நீலகிரி குன்றுகள் ii) பாம்பன் தீவு iii) கரும்பு விளையும் பகுதி
iv) ஸ்டான்லி அணை v) காரைக்கால் vi) மதுரை
vii) செம்பரம்பாக்கம் ஏரி viii) ஏதேனும் ஒரு தோல் தொழிற்சாலை

## வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள் - 2

**வகுப்பு : 10 ஆம் வகுப்பு** | **பாடம் : சமூக அறிவியல்**

**நேரம் : 15 mins + 3 hrs** | **மொத்த மதிப்பெண்கள் : 100**

### பகுதி - I

**குறிப்பு : கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையை சேர்த்து எழுதவும்.** $14 \times 1 = 14$

1. சிவசுப்ரமணியார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?
   ஆ) கயத்தாறு ஆ) நாகலாபுரம் இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி
2. விதவை மறுமணச் சங்கத்தை உருவாக்கியவர் யார்?
   அ) M.G. ரானடே ஆ) தேவேந்திரநாத் தாகூர் இ) ஜோதிபாபூலே ஈ) அய்யன்காளி
3. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்?
   அ) கல்கத்தா ஆ) மும்பை இ) டெல்லி ஈ) மைசூர்
4. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு / அமர்வு எங்கே நடைபெற்றது?
   அ) மெரினா ஆ) மைலாப்பூர்
   இ) புனித ஜார்ஜ் கோட்டை ஈ) ஆயிரம் விளக்கு
5. ‘சத்யார்த்தபிரகாஷ்’ எனும் நூலின் ஆசிரியர் யார்?
   அ) தயானந்த சரஸ்வதி ஆ) ஜோதிபாபூலே
   இ) அன்னி பெசன்ட் ஈ) சுவாமி சாரதாநந்தா
6. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு _______ ஆகும்.
   அ) சமவெப்ப கோடுகள் ஆ) சம மழைக்கோடுகள்
   இ) சம அழுத்தக் கோடுகள் ஈ) அட்சக் கோடுகள்
7. பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் _______
   அ) ஆக்ஸிஜன் ஆ) நீர் இ) கார்பன் ஈ) நைட்ரஜன்
8. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் _______.
   அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புது டெல்லி ஈ) ஹைதராபாத்
9. இந்தியாவின் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது __________.
   அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை
10. தமிழ்நாட்டின் தீர்க்க பரவல் ________ முதல் ________ வரை உள்ளது .
    அ) *76°18´* கி முதல் *80°20´* கி வரை ஆ) 76°18´ மே முதல் 80°20´ மே வரை
    இ) 10°20´ கி முதல் 86°18´ கி வரை ஈ) 10°20´ மே முதல் 86°18´ மே வரை
11. மேலவை உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது
    அ) 25 வயது ஆ) 21 வயது இ) 30 வயது ஈ) 35 வயது
12. ஒபெக் (OPEC) என்பது
    அ) சர்வதேச காப்பீட்டு நிறுவனம் ஆ) ஒரு சர்வதேச விளையாட்டுக் கழகம்
    இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு ஈ) ஒரு சர்வதேச நிறுவனம்
13. நாட்டு வருமானம் அளவிடுவது
    அ) பணத்தின் மொத்தமதிப்பு ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
    இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
14. வளர்ச்சிக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கு எது?
    அ) பாதுகாப்பு ஆ) வெளிநாட்டுக் கொள்கை
    இ) பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

## பகுதி – II

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** $10 \times 2 = 20$
**28-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?
16. வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?
17. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
18. தமிழ் மறுமலர்ச்சி குறித்து சிறுகுறிப்பு வரைக.
19. 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?
20. இந்தியாவின் காணப்படும் மண்வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
21. 'தேரி' - என்றால் என்ன?
22. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.
23. நிதி மசோதா என்றால் என்ன?
24. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
25. உலகமயமாக்கலை மேற்கொள்ளும் சீர்திருத்தங்கள் யாவை?
26. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகள் யாவை?
27. தொழில்முனைவு என்றால் என்ன?
28. 'வேளாண்மை' - வரையறு

## பகுதி – III

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** $10 \times 5 = 50$
**42-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிக்கிடையேயான ஒப்பந்தம் _______ என அழைக்கப்பட்டது.
ii) சதுப்பு நிலக்காடுகள் _______ என்றும் அழைக்கப்படுகின்றன.
iii) _______ அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.
iv) உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் _______ இருந்து அமுலுக்கு வந்தது.
v) கிழக்கு தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் _______ ஆகும்.

**30. பொருத்துக.**

| | |
|---|---|
| i) ஜிங்கோயிசம் | - மின்னல் வேகத்தாக்குதல் |
| ii) டோங்கிங் | - நிரங்கரி இயக்கம் |
| iii) பிளிட்ஸ்கிரிக் | - தெற்கு வியட்நாம் |
| iv) நிகோ டின் டியம் | - கொரில்லா நடவடிக்கைகள் |
| v) பாபா தயாள்தாஸ் | - இங்கிலாந்து |

**31. பொருத்துக.**

| | |
|---|---|
| i) சாங்போ | - தங்கப் புரட்சி |
| ii) வடகிழக்குப் பருவக் காற்று | - செயற்கைக்கோள் தகவல் தொடர்பு |
| iii) தோட்டக் கலை | - மேக்னடைட் |
| iv) இரும்பு தாது | - பிரம்மபுத்ரா |
| v) INSAT (இன்சாட்) | - அக்டோபர், டிசம்பர் |

**32. அ) வேறுபடுத்துக.**

i) இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்
ii) ராபி பருவம் மற்றும் காரிப் பருவம்

**ஆ) காரணம் கூறுக:** சிறிய வேளாண் பண்ணைகள் இந்தியாவில் அதிகம்.

33. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.
34. 1905ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்துகொண்டனர்?

35. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.
36. தமிழ்நாட்டில் உள்ள மண் வகைகளின், பரவல் மற்றும் அவற்றின் பண்புகளை விளக்குக.
37. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.
38. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.
40. பொது விநியோக முறையை விவரிக்கவும்.

***குறிப்பு :*** *பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றி குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.*

**41. கீழ்க்காண்பனவற்றிக்கு காலக்கோடு வரைக.**

1915 முதல் 1935 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

**42. உலக வரைபடத்தில் இடங்களை குறிக்கவும்.**

i) ஜெர்மனி
ii) போஸ்னியா
iii) ஹிரோஷிமா
iv) ரஷ்யா
v) போலந்து

## பகுதி – IV

**இரு வினாக்களுக்கும் விடையளிக்க.** $2 \times 8 = 16$

43. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.

**(அல்லது)**

i) இத்தாலியில் முசோலினியின் எழுச்சி பற்றி கூறுக.
ii) இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

***குறிப்பு :*** *பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் இடங்களை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.*

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்**

i) பாமீர் முடிச்சு
ii) சிந்து நதி
iii) பாலைவன காடுகள்
iv) மன்னார் வளைகுடா
v) மலை மண்
vi) மங்களுரூ
vii) கொல்கத்தா
viii) சென்னை - கொல்கத்தா இரயில் பாதை

**(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**

i) அகத்திய மலை
ii) குமரி முனை
iii) கேழ்வரகு விளையும் பகுதி
iv) வீராணம் ஏரி
v) நாகப்பட்டினம்
vi) திருச்சி
vii) பூண்டி சத்திய மூர்த்தி ஏரி
viii) ஒரு சர்க்கரை தொழிற்சாலை

## வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள் - 3

வகுப்பு : 10 ஆம் வகுப்பு | பாடம் : சமூக அறிவியல்

நேரம் : 15 mins + 3 hrs | மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

**குறிப்பு :கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையை சேர்த்து எழுதவும்.** **$14 \times 1 = 14$**

1. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
   அ) கவாசாகி ஆ) ஆஸ்திரியா இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி

2. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?
   அ) 1805 மே 24 ஆ) 1805 ஜீலை 10
   இ) 1806 ஜீலை 10 ஈ) 1806 செப்டம்பர் 10

3. 'நிலம் கடவுளுக்குச் சொந்தம்' என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர் யார்?
   அ) டிடு மீர் ஆ) சித்து இ) டுடு மியான் ஈ) ஷரியத்துல்லா

4. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?
   அ) 1827 ஆ) 1829 இ) 1826 ஈ) 1927

5. "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" எனக் கூறியவர் யார்?
   அ) அன்னிபெசன்ட் ஆ) M. வீரராகவாச்சாரி இ) B.P. வாடியா ஈ) G.S. அருண்டேல்

6. பழவேற்காடு ஏரி ________ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.
   அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
   இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்

7. கரிசல் மண் __________ எனவும் அழைக்கப்படுகிறது.
   அ) வறண்ட மண் ஆ) உவர் மண் இ) மலை மண் ஈ) பருத்தி மண்

8. தமிழ்நாட்டின் தீர்க்க பரவல் ________ முதல் ________ வரை உள்ளது .
   அ) *76°18´* கி முதல் *80°20´* கி வரை ஆ) 76°18´ மே முதல் 80°20´ மே வரை
   இ) 10°20´ கி முதல் 86°18´ கி வரை ஈ) 10°20´ மே முதல் 86°18´ மே வரை

9. இந்தியாவின் மிகப்பெரிய காயல் ஏரி
   அ) அரபிக்கடல் ஆ) வங்கக் கடல் இ) இந்தியப் பெருங்கடல் ஈ) தைமுர்க்கடல்

10. நாம் பருத்தி ஆடைகளை ________ காலத்தில் அணிகிறோம்.
   அ) கோடைக்காலம் ஆ) குளிர்காலம் இ) மழைக்காலம் ஈ) வடகிழக்கு பருவக்காற்று காலம்

11. நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் ___________ஆவார்.
   அ) குடியரசுத் தலைவர் ஆ) தலைமை நீதிபதி
   இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு

12. மாநில சபாநாயகர் ஒரு ________.
   அ) மாநிலத் தலைவர் ஆ) அரசின் தலைவர்
   இ) குடியரசு தலைவரின் முகவர் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

13. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை
   அ) நீர்பாசன கொள்கை ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
   இ) நில சீர்திருத்தக் கொள்கை ஈ) கூலித் கொள்கை

14. ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?
   அ) மதிப்புக் கூட்டு வரி (VAT) ஆ) வருமான வரி
   இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ஈ) விற்பனை வரி

## பகுதி – II

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **$10 \times 2 = 20$**
**28-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிப்பெசன்டின் பங்களிப்பு யாது?
16. ராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
17. பகத் சிங் பற்றி குறிப்பு வரைக.
18. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.
19. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
20. “வெப்ப குறைவு வீழ்ச்சி” என்றால் என்ன?
21. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
22. பேரிடர் அபாய நேர்வு - வரையறு.
23. இந்தியாவின் அணுசக்தி கொள்கையை விவரி.
24. இந்திய குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
25. ஜப்பான் இந்தியா உற்பத்தி நிறுவனத்தின் (JIM) பங்கு என்ன?
26. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.
27. வரிக்கும் கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
28. வளத்தை வரையறுத்து அதன் வகைகளை விவரி

## பகுதி – III

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **$10 \times 5 = 50$**
**42-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) போயர்கள் ________ என்றும் அழைக்கப்பட்டனர்.
ii) கிணற்றுப் பாசனத்தில் ________ முதலிடம் வகிக்கிறது.
iii) ________ மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.
iv) ________ ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
v) ஆற்றுத் தீவான ஸ்ரீரங்கம் ________ மற்றும் ________ ஆறுகளுக்கு இடையே அமைந்துள்ளது.

**30. பொருத்துக.**

i) கமால் பாட்ஷா - ஜீவ காருண்யப் பாடல்கள்
ii) ஹின்டன்பர்க் - ஸ்டாலின் கிரேடு
iii) வோல்கா - துருக்கி
iv) டாக்டர் சன் யாட் சென் - ஜெர்மனி
v) திருவருட்பா - கோமிங்டாங்

**31. பொருத்துக.**

i) காட்வின் ஆஸ்டின் (K2) - இமயமலைகள்
ii) உயிர்பன்மைச் சிறப்பு பகுதிகள் - உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார்
iii) இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் - நகரமயமாக்கலின் தாக்கம்
iv) கருப்பு தங்கம் - இந்தியாவின் உயர்ந்த சிகரம்
v) புறநகரப் பரவல் - நிலக்கரி

**32. அ) வேறுபடுத்துக.**

i) இமயமலை ஆறுகள் மற்றும் தீப கற்ப ஆறுகள்
ii) சணல் ஆலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள்

**ஆ) காரணம் கூறுக:** மலைப்பகுதிகள் சமவெளிகளை விடக் குளிரானவை.

33. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
34. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.

35. ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
36. தமிழ்நாட்டின் கோடை மற்றும் குளிர் பருவங்களின் பண்புகளை விவரிக்கவும்
37. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் (OPEC) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன என்பது குறித்தும் குறிப்பிடுக.
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.

***குறிப்பு** : பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றி குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.*

**41. கீழ்க்காண்பனவற்றிக்கு காலக்கோடு வரைக.**

1930 முதல் 1950 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

**42. உலக வரைபடத்தில் இடங்களை குறிக்கவும்.**

i) பிரான்ஸ்
ii) செர்பியா
iii) நாகசாகி
iv) கனடா
v) ஆர்க்டிக் கடல்

## பகுதி – IV

**இரு வினாக்களுக்கும் விடையளிக்க.** $2 \times 8 = 16$

43. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.

**(அல்லது)**

i) ஐரோப்பியக்குழுமம் எவ்வாறு ஐரோப்பிய இணைவானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக.
ii) தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.

***குறிப்பு** : பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் இடங்களை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.*

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்**

i) மேற்கு தொடர்ச்சி மலைகள்
ii) சாங்போ நதி
iii) இமயமலை காடுகள்
iv) கட்ச் வளைகுடா
v) சதுப்பு நிலம்
vi) கோவா
vii) வேம்பநாடு ஏரி
viii) சென்னை - டில்லி இரயில் பாதை

**(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**

i) ஆனை மலை
ii) கோடியக்கரை
iii) பருத்தி விளையும் பகுதி ஏதேனும் ஒன்று
iv) சாத்தனூர்
v) எண்ணூர்
vi) கோயம்புத்தூர்
vii) முல்லை பெரியார்
viii) ஒரு பட்டு தொழிற்சாலை

## வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள் - 4

வகுப்பு : 10 ஆம் வகுப்பு | பாடம் : சமூக அறிவியல்

நேரம் : நேரம் : 15 mins + 3 hrs | மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

**குறிப்பு : கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையை சேர்த்து எழுதவும்.** $14 \times 1 = 14$

1. பின்லாந்தைத் தாக்கியதற்காக சர்வதேச சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

2. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில இயற்றப்பட்டது?
அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936

3. 'ராஸ்ட் கோப்தார்' யாருடைய முழக்கம்?
அ) பார்சி இயக்கம் ஆ) அலிகார் இயக்கம் இ) ராமகிருஷ்ணர் ஈ) திராவிட மகாஜன சபை

4. வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்தக் காரணமாயிருந்த தலைமை தளபதி யார்?
அ) கர்னல் பேன்கோர்ட் ஆ) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்
இ) சர் ஜான் கிரடாக் ஈ) கர்னல் அக்னியூ

5. அமிர்தசரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?
அ) மோதிலால் நேரு ஆ) சை.ஃபுதீன் கிச்லு
இ) முகம்மது அலி ஈ) ராஜ்குமார் சுக்லா

6. ________ மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது
அ) வண்டல் ஆ) கரிசல் இ) செம்மண் ஈ) உவர் மண்

7. கீழ்க்கண்டவற்றில் எவை வானுலங்கு ஊர்தியுடன் (ஹெலிகாப்டர்) தொடர்புடையது?
அ) ஏர் இந்தியா ஆ) இந்தியன் ஏர்லைன்ஸ்
இ) வாயுதூத் ஈ) பவன்ஹான்ஸ்

8. தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம்
அ) மேட்டூர் ஆ) பாபநாசம் இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா

9. யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோளப் பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது_____.
அ) நீலகிரி ஆ) அகத்திய மலை இ) பெரிய நிக்கோபார் ஈ) கட்ச்

10. புகழ் பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம்
அ) ஜார்கண்ட் ஆ) பீகார் இ) இராஜஸ்தான் ஈ) அசாம்

11. எந்த குழுக்கள் / கமிஷன்கள் மத்திய-மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?
1. சர்க்காரியா குழு 2. ராஜமன்னார் குழு 3. M.N. வெங்கடாசலையா குழு
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு
அ) 1, 2 & 3 ஆ) 1 & 2 இ) 1 & 3 ஈ) 2 & 3

12. ________ இல் ஒரு வெற்றிகரமான தொழில்துறை தொகுப்பு முற்றிலும் தமிழ்நாட்டால் உருவாக்கப்பட்டது.
அ) ஓசூர் ஆ) திண்டுக்கல் இ) கோவில்பட்டி ஈ) திருநெல்வேலி

13. வர்த்தக நோக்கத்திற்காக முதலில் இந்தியாவுக்கு வந்தவர்கள்
அ) ரோமானிய பேரரசு ஆ) போர்ச்சுகீசியர் இ) டச்சு ஈ) டேனிஷ்

14. இந்தியாவில் உள்ள வரிகள்
அ) நேர்முக வரிகள் ஆ) மறைமுக வரிகள்
இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) ஏதுமில்லை

## பகுதி – II

***எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.*** **$10 \times 2 = 20$**
***28-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.***

15. 1884-85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக.
16. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
17. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகளைத் தருக.
18. நீதிக்கட்சியால் நிறைவேற்றப்பட்ட இந்துசமய அறநிலைய சட்டத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.
19. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
20. இந்தியாவின் மீன்வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு தருக.
21. சாலைப் போக்குவரத்தின் சாதக அம்சங்களை குறிப்பிடுக.
22. கடற்கரைச்சமவெளி எவ்வாறு உருவாகிறது?
23. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?
24. இந்தியாவின் அணுசக்தி கொள்கையை விவரி.
25. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.
26. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி – சிறு குறிப்பு வரைக.
27. தற்போது தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் சிக்கல்கள் யாவை?
28. புவியியல் குறியீடு என்றால் என்ன? இரு எடுத்துக்காட்டுகள் தருக.

## பகுதி – III

***எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.*** **$10 \times 5 = 50$**
***42-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.***

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) ராமகிருஷ்ணா மிஷன் ________ ஆல் நிறுவப்பட்டது.
ii) இந்தியா முழுவதும் ________ க்கும் மேற்பட்ட மென்பொருள் தொழிலகங்கள் உள்ளன.
iii) இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் ________.
iv) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ________ ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
v) கிழக்கு தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் ________ ஆகும்.

**30. பொருத்துக.**

| | |
|---|---|
| i) எம்டன் | - ஹிட்லர் |
| ii) மூன்றாம் ரெய்க் | - டில்லி சலோ |
| iii) க்வாடல்கெனால் | - எகிப்து |
| iv) அன்வர் சாதத் | - சென்னை |
| v) சுபாஷ் சந்திர போஸ் | - சாலமோன் தீவு |

**31. பொருத்துக.**

| | |
|---|---|
| i) புதிய வண்டல் படிவுகள் | - மகாநதி |
| ii) கடலோரக் காடுகள் | - வானூர்தி |
| iii) ஹிராகுட் | - மும்பை |
| iv) பாக்சைட் | - காதர் |
| v) மேசகான் கப்பல்கட்டும் தளம் | - கடற்கரைக் காடுகள் |

**32. அ) வேறுபடுத்துக.**

i) வட கிழக்கு பருவக் காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று
ii) உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்

**ஆ) காரணம் கூறுக:** மேற்கு கடற்கரைச் சமவெளி குறுகலானது.

33. ஐரோப்பியக்குழுமம் எவ்வாறு ஐரோப்பிய இணைவானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக.
34. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாராணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.
35. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.

36. தமிழ்நாட்டின் கனிம பரவலை விவரி.
37 அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.
38. இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் குறித்தும் இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் மூன்று உலகளாவிய குழுக்கள் பற்றிய சிறப்பு அம்சங்கள் குறித்தும் எழுதுக.
39. MNC யின் நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.
40. குறைந்த பட்ச ஆதரவு விலையை விளக்குக.

***குறிப்பு :*** *பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றி குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.*

**41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.**
1900 முதல் 1920 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை எழுதுக.

**42. உலக வரைபடத்தில் இடங்களை குறிக்கவும்.**
i) இத்தாலி
ii) பல்கேரியா
iii) ஹவாய் தீவு
iv) பெல்ஜியம்
v) அட்லாண்டிக் கடல்

## பகுதி – IV

**இரு வினாக்களுக்கும் விடையளிக்க.** $2 \times 8 = 16$

43. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

**(அல்லது)**

i) உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.
ii) பன்னாட்டு சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.

***குறிப்பு :*** *பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் இடங்களை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.*

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்**
i) கிழக்கு தொடர்ச்சி மலை
ii) மகாநதி
iii) அல்பைன் காடுகள்
iv) பண்ணா
v) செம்மண்
vi) மும்பை
vii) சாம்பார் உப்பு ஏரி
viii) டெல்லி - மும்பை இரயில் பாதை

**(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**
i) பச்சை மலை
ii) பாக் நீர் சந்தி
iii) காபி விளையும் பகுதி
iv) ஆழியாறு
v) இராமேஸ்வரம்
vi) சேலம்
vii) கோதையாறு
viii) ஒரு சிமெண்ட் தொழிற்சாலை

## வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள் - 5

**வகுப்பு : 10 ஆம் வகுப்பு** | **பாடம் : சமூக அறிவியல்**

**நேரம் : நேரம் : 15 mins + 3 hrs** | **மொத்த மதிப்பெண்கள் : 100**

### பகுதி - I

**குறிப்பு : கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையை சேர்த்து எழுதவும்.** $14 \times 1 = 14$

1. தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பெயர் யாது?
   அ) ஆரிய சமாஜம் ஆ) பிரம்ம சமாஜம் இ) பிரார்த்தனை சமாஜம் ஈ) ஆதி பிரம்ம சமாஜம்
2. கூற்று : அமெரிக்காவின் மார்ஷல் திட்டம் போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மறு நிர்மாணத்திற்காக முன்வைக்கப்பட்டது.
   காரணம் : அமெரிக்க நாடு அத்திட்டத்தின் மூலம் மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டுவர நினைத்தது.
   அ) கூற்றும் காரணமும் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
   ஆ) கூற்றும் காரணமும் தவறானவை.
   இ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றைத் துல்லியமாக விளக்குகிறது.
   ஈ) கூற்று தவறு. ஆனால் காரணம் சரி.
3. இந்தியாவில் முதன் முதலில் உயர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்
   அ) கல்கத்தா, பம்பாய், சென்னை ஆ) டெல்லி மற்றும் கல்கத்தா
   இ) டெல்லி, கல்கத்தா, சென்னை ஈ) கல்கத்தா, சென்னை, டெல்லி
4. ஆறுகளின் மூலம் உருவாகும் மண்
   அ) செம்மண் ஆ) கரிசல் மண் இ) பாலைமண் ஈ) வண்டல் மண்
5. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி __________ என அழைக்கப்படுகிறது.
   அ) கடற்கரை ஆ) தீபகற்பம் இ) தீவு ஈ) நீர்ச்சந்தி
6. மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம்.
   அ) உயிரி சக்தி ஆ) சூரிய சக்தி இ) நிலக்கரி ஈ) எண்ணெய்
7. கூற்று : (A) இமயமலையானது ஒரு காலநிலை அரணாக செயல்படுகிறது.
   காரணம் : (R) இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்க்காற்றை தடுத்து இந்திய துணைக்கண்டத்தை மிதவெப்பமாக வைத்திருக்கிறது.
   அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி.
   ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் தவறு.
   இ) கூற்று சரி காரணம் தவறு.
   ஈ) கூற்று தவறு காரணம் சரி.
8. சிவசுப்ரமணியார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?
   ஆ) கயத்தாறு ஆ) நாகலாபுரம் இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி
9. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?
   அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936
10. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?
   அ) பாலக்காடு ஆ) செங்கோட்டை இ) போர்காட் ஈ) அச்சன்கோவில்
11. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர் __________
   அ) பருப்பு வகைகள் ஆ) சிறுதானியங்கள் இ) எண்ணெய் வித்துக்கள் ஈ) நெல்
12. நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச் சட்டம் 480 ஐ கொண்டு வந்த நாடு __________
   அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) சிங்கப்பூர் ஈ) இங்கிலாந்து
13. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி __________.
   அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) பஞ்சாப் ஈ) மத்தியப் பிரதேசம்
14. திருப்பூர் __________ தொழிலுக்குப் பெயர்பெற்றது.
   அ) தோல் பதனிடுதல் ஆ) பூட்டு தயாரித்தல்
   இ) பின்னலாடை தயாரித்தல் ஈ) வேளாண் பதப்படுத்துதல்

## பகுதி – II

***எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். $10 \times 2 = 20$***
***28-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.***

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் யாவை?
16. ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?
17. ஒத்துழையாமை இயக்கத்தை காந்தியடிகள் ஏன் திரும்பப்பெற்றார்?
18. கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் எவ்வாறு செயலிழக்கச் செய்யப்பட்டது?
19. பேரிடர் அபாய நேர்வு - வரையறு.
20. இந்தியாவில் சதுப்புநிலக் காடுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.
21. ஜப்பான் இந்தியா உற்பத்தி நிறுவனத்தின் பங்கு என்ன?
22. வளத்தை வரையறுத்து வகைகளை குறிப்பிடுக.
23. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
24. தேசிய அவசரநிலை என்றால் என்ன?
25. வளர்வீத வரி என்றால் என்ன?
26. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் யாது?
27. பசுமை புரட்சியின் விளைவுகள் என்ன?
28. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?

## பகுதி – III

***எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். $10 \times 5 = 50$***
***42-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.***

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) _______ ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
ii) நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி _______ ஆகும்.
iii) உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் _______ இருந்து அமுலுக்கு வந்தது.
iv) _______ என்பவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது காங்கிரஸ் வானொலியை திரைமறைவாக செயல்படுத்தினார்.
v) _______ ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

**30. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| i) | வருமான வரி | - கடத்துதல் |
| ii) | ஆயத்தீர்வை | - நேர்முக வரி |
| iii) | கன்வர் சிங் | - ராஞ்சி |
| iv) | முண்டா கிளர்ச்சி | - பீகார் |
| v) | கருப்பு பணம் | - ஜூலை 1, 2007 |

**31. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| i) | பாக்சைட் | - சிமெண்ட் |
| ii) | ஜிப்சம் | - வானூர்தி |
| iii) | கருப்பு தங்கம் | - மின்சாதன பொருட்கள் |
| iv) | இரும்பு தாது | - நிலக்கரி |
| v) | மைக்கா | - மேக்னடைட் |

**32. அ) வேறுபடுத்துக.**

i) தென்மேற்கு பருவக்காற்று மற்றும் வடகிழக்கு பருவக்காற்று
ii) இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்

**ஆ) காரணம் கூறுக:** சிறிய வேளாண் பண்ணைகள் இந்தியாவில் அதிகம்.

33. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
34. நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.
35. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.

36. காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.
37. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
38. தமிழ்நாட்டின் கோடை மற்றும் குளிர் பருவங்களின் பண்புகளை விவரிக்கவும்.
39. இந்தியாவில் GDPயில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.
40. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படை காரணிகள் எவை?

***குறிப்பு** : பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றி குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.*

**41. கீழ்க்காண்பனவற்றிக்கு காலக்கோடு வரைக.**

1820 முதல் 1880 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

**42. உலக வரைபடத்தில் இடங்களை குறிக்கவும்.**

i) சூயஸ் கால்வாய்
ii) போலந்து
iii) மாஸ்கோ
iv) மத்திய தரைக்கடல்
v) பெல்ஜியம்

## பகுதி – IV

**இரு வினாக்களுக்கும் விடையளிக்க.** $2 \times 8 = 16$

43. சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமானவற்றை ஆய்ந்து அதன் விளைவுகளை எடுத்தியம்புக.

**(அல்லது)**

i) பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

ii) தமிழ்நாட்டில் பிராமணரல்லாதோர் இயக்கம் தோன்றி வளர்ந்ததை ஆய்வு செய்க.

***குறிப்பு** : பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் இடங்களை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.*

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்**

i) தார் பாலைவனம்
ii) கங்கைச் சமவெளி
iii) ஆரவல்லி மலைத்தொடர்
iv) இலட்சத் தீவுகள்
v) கொங்கன் கடற்கரை
vi) சோட்டா நாக்பூர் பீடபூமி
vii) இமயமலை
viii) பாக் நீர் சந்தி

**(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**

i) வேலூர்
ii) திண்டுக்கல்
iii) வேடந்தாங்கல் வனவிலங்கு சரணாலயம்
iv) காவிரி
v) ஜவ்வாது மலை
vi) மணிமுத்தாறு நீர்த்தேக்கம்
vii) சென்னை
viii) தஞ்சாவூர்